بسم الله الرحمن الرحيم

# DESPISING GOD'S MESSENGERS IS SUBJECT TO GOD'S PUNISHMENT

# இறை தூதர்களை நிராகரிப்போர்களுக்கு இறை தண்டனை நிச்சயம்

இறைவனின் பரிபூரண வேதமாகிய திரு குர்-ஆன் மனிதகுலத்திற்கு குறிப்பாக இஸ்லாமிய சமுதாயத்திற்கு மார்க்க தரிசனவும் அவர்களின் வாழ்க்கைக்கு வழிகாட்டியும் ஆகும். அந்த திரு குர்-ஆனின் போதனைகளின் அடிப்படையில் பார்த்தால், நமக்கு தந்தருளியிருக்கின்ற அவ்வேதத்தையும், ஞானத்தையும் மெய்ப்பிக்கும் ஒரு தூதர் நம்மிடத்தில் வந்தால் அவர் மீது கட்டாயமாக நம்பிக்கை கொள்ள வேண்டியது ஒவ்வொரு முஸ்லீம்களுடையவும் கடமையாகும். ஆனால் அவர் பொய்யாளராக இருந்தார் அதற்குரிய தண்டனை அவருக்கு மட்டுமேயன்றி அவர் மீது நம்பிக்கை கொண்டோர்களுக்கு எவ்விதக் குற்றவும் இல்லை என்றும், மாறாக அவர் உண்மையாளராக இருந்தால் அவர் மீது அவநம்பிக்கை கொண்டோர்கள் இம்மையிலும் மறுமையிலும் நிச்சயமாக தண்டனைக்கு ஆளாகி விடுவார்களேயன்றி தூதருக்கு எவ்வித குற்றவும் இல்லை என்றும் நமக்கு உணரமுடியும். அப்போது இறைநெறியைக் காட்டித்தருகின்ற பொதுமறையாம் இறைமறை நம்மிடம் இப்படி கூறும் போது அறைநெறி கெட்ட அகந்தை நமக்கு தேவையா?.

ஒரு இறைதூதரை உலகமக்கள் அனைவரும் ஒன்றிணைந்து எதிர்த்தாலும் சரி முடிவில் வெற்றி அவருக்கும் அவர்மீது ஈமான் கொண்ட மக்களுக்கும் கிடைத்து விடும் என்றும் அதேகணம் அவர் பெய்யாளராக இருந்தால் அவர் ஒருபொழுதும் வெற்றியடையமாட்டார் என்று மட்டுமல்லாமல், அவரது நாடி நரம்பையே அறுத்து விடுவேன் என்றும் சற்றும் சந்தேகமின்றி அல்லாஹ் அவனது திருமறை மூலமாக நம்மை தெரிவிக்கின்றான். அவ்வாறே இறைதூதர்களை நிராகரித்ததாலும், துன்புறுத்தியதாலும், இழுவுப்படுத்தியதாலும், ஒவ்வொரு சமுதாய மக்களும் தண்டனைக்கு ஆளாக்கப்பட்டார்கள் என்று குர்-ஆன் கூறும் அதே நேரத்தில் பொய்யரோ மெய்யரோ ஆன ஒரு தூதரை ஏற்றுக்கொண்ட காரணத்தால் ஏதேனும் சமுதாய மக்களை இறைவன் தண்டித்ததாக குர்-ஆனில் எங்கும் சொல்லப்படவுமில்லை. சுருக்கமாக சொன்னால் திரு குர்-ஆனில் எங்கு புரட்டிப்பார்த்தாலும் இவ்விஷயத்தை அல்லாஹ் மீண்டும் மீண்டும் நம்மை நினைவூட்டியிருப்பதாக காணமுடியும். அதற்கு காரணம் நாமும் முன்னோர்களை போன்று மாறிவிடக்கூடாது என்பதற்காகதான். அதில் இருந்து நாம் புரிந்துக் கொள்ள வேண்டியது என்னவென்றால் நம்மிடத்தில் இருக்கும் வேதத்தையும், ஞானத்தையும் மெய்படுத்திக்கொண்டு ஒரு தூதர் அவதரித்தால் முதன்மையாக அவர் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும். அதிலுள்ள மற்று விஷயங்களை அல்லாஹ்வே பார்த்து கொள்வான் என்பது தான். அவ்வாறு எல்லாம் வல்ல அல்லாஹ்வே நமக்கு கற்றுத்தருகின்றான். இல்லை நாங்கள் அப்படி செய்யமாட்டோம் என்று சொல்வதற்கும் செயல்படுவதற்கும் நீங்கள் முன் சமுதாயத்தில் நிராகரிப்பவர்களாகிய நயவஞ்சகரிடத்தில் ஒப்பந்தம் செய்து கொண்டீர்களா? இல்லை அவர்களின் வம்சாவழியை சார்ந்திருக்க ஆசைப்படுகின்றீர்களா? சற்று சிந்தித்து பாருங்கள்.

இறையாட்சியின் மிக சிறப்பான பண்பு, இறைதூதர்களை இந்த மண்ணில் தோற்றிவிப்பது என்பது எவராலும் மறுக்க இயலாது. இறைவன் அப்படி செய்யாதிருந்திருப்பின் நாம் ஏகநாகிய! எல்லாம் வல்ல இறைவனை அறிந்திருக்கவே மாட்டோம். அல்லாஹ் நமக்கு அருள் செய்வதற்கு தூதர்களை நியமிக்கின்றான். ஆனால் பெருபான்மை மக்களே அவரை உதாசீனப்படுத்தி தூக்கி வீசுகிறார்கள். அவருக்கு அக்கிரமும் அநீதியும் விளைவிக்கின்றார்கள். இறையாட்சிக்கே மறைபோடும் இந்த இறுமாப்பு யார் உங்களுக்கு கற்று தந்தது? இறைவனின் கட்டளைகளுக்கு கட்டுபாடுகளை விதிக்கும் படிப்பினைக்கு எந்த பல்கலைக் கழகம் உங்களுக்கு சான்றினைகளை வழங்கியது? இறை தூதர்கள் மீது அவநம்பிக்கை கொண்டு அவரை பொய்படுத்தி, கள்வனென்று முத்திரைக் குத்துவதற்கு யார் உங்களுக்கு அதிகாரம் கொடுத்தது?. ஆனால் ஒன்று நினைவில் கொள்ளுங்கள் இறைவன் இருக்கும் காலம் வரையிலும், அவனுடைய கலாம் உண்மைகளை கூறும் நேரம் வரையிலும், நபி(ஸ) வுடையவும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அஹ்மது(அ) வுடையவும் இனிய போதனைகள் நிலைநிற்கும் நிமிடம் வரையிலும் அல்லாஹ் இந்த மண்ணில் இறைதூதர்களை எழுப்புவான் என்பதிலும் அவனது இறையாண்மையை நிரூபிப்பான் என்பதிலும் எவ்வித அய்யவும் இல்லை. அது நடந்தே தீரும்.

இறைவன், ஹஸ்ரத் முஹமது (ஸ)வுடைய சமுதாயத்திற்கு எவ்வளவு அருள் செய்கின்றான் என்பதைப் பற்றி சற்று எண்ணிப்பாருங்கள். நபி(ஸ) க்கு பிறகு ஒவ்வொரு நூற்றாண்டின் தலைப்பிலும் ஒவ்வொரு தூதரை

ஏற்படுத்தி மார்க்கத்தை தூய்மைபடுத்தியும் அதன் தரத்தை மேன்மைப்படுத்தியும் வருகின்றான். இதர மதங்களுக்கும் அதன் கொள்கைகளுக்கும் முன்னால் இஸ்லாம் மட்டுமே உண்மையும் உயிருள்ளதுமான மதம் என்பதற்கு அது மிக சிறந்த சான்றாய் விளங்குகின்றது. ஹிஜ்ரா 1-ம் நூற்றாண்டு முதல் 14-ம் நூற்றாண்டு வரை இறைவன் செயல்படுத்தி வந்த அவனது நடைமுறை இந்த 15-ம் நூற்றாண்டிலும் அமல்படுத்த அவன் மறந்து விட்டானோ? இஸ்லாம் 14-ம் நூற்றாண்டுக்கு பிறகு உயிரிழந்து விட்டதோ என்ன? இல்லை இஸ்லாம் என்றென்றும் நிலைநிற்கும் மார்க்கமாகும். அதனால் இந்த 15-ம் நூற்றாண்டிலும் இஸ்லாமத வெற்றிக்கு வழிவகுக்க அல்லாஹ் ஒரு தூதனை அனுப்பிவைத்திருக்கின்றான். ஆப்பிரிக்கன் பூகண்டத்தில் மௌரிஷியஸ் நாட்டை சார்ந்த ஹஸ்ரத் முனீர் அஹ்மது அஸீம் (அ) அவர்கள் இந்த நூற்றாண்டில் அல்லாஹ் தன்னை அவனது தூதனாக நியமித்திருக்கின்றான் என்ற நற்செய்தியை கடந்த சிலவருடங்களாக உலக மக்களிடம் வெளிப்படுத்தி வருகின்றார்.

அன்னார் கூறுகின்றார்

**“திரு குர்-ஆன் பாடங்களும் திருநபி போதனைகளும் முழு உலகத்திற்குரியதாகும். எனவே, முஸ்லீம் மக்களை மட்டுமின்றி மனிதகுலத்தை அகிலவும் சீர்திருத்த அல்லா ஒரு கலீஃபாவை அனுப்பி வைத்துள்ளான். நுபூவத்தின் வாசல் ஒருபோதும் அடைக்கப்படுவதில்லை என்றும் அது எப்போதும் நம்மோடு இருக்கும் என்றும் கூறிகொண்டிருந்தவர்கள் (அஹ்மதிகள்) இப்போது சுன்னி முஸ்லீம்களுடையும் மற்றுள்ளவர்களுடையவும் பாதசுவடுகளை பின்பற்றிக்கொண்டு நுபூவத்தின் வாசலை அடைத்திருக்கின்றார்கள். அடிப்படையற்ற அவர்களின் அக்கூற்று இஸ்லாமுக்கும் திரு குர்-ஆனுக்கும் அப்பாற்பட்டதாகும். ஆனால், நான் நிச்சயமாக கூறிக்கொள்கின்றேன். இறைவன் அவனது கலாமில் கூறியிருப்பது போன்று இறை வெளிப்பாடுகளின் வாசல் எப்போதும் திறந்தே இருக்கும். எனக்கு பின்னரும் இச்செயல் தொடரும். ஒவ்வொரு நூற்றாண்டிலும் இறைவனால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற நல்லடியார்கள் தோன்றுவார்கள். அவர்களுக்கு அவன் வெளிப்பாடுகளை வழங்கி இஸ்லாமின் மேன்மையை பாதுகாப்பான் அவனது கிலாஃபத்தை நிலைநாட்டுவான். இறுதியில் இஸ்லாம் அதன் ஒளியை முழு உலகிலும் பரவச்செய்யும். பிறகு ஒரு சமுதாயம் உம்மத்தே வாஹிதா மட்டும் நிலை நிற்கும். பூமியில் ஆன்மாக்கள் அனைத்தும் ஒன்றிணைந்து இறைவனின் மேன்மையை புகழ்பாடி அவன் ஏகன் என்ற தத்துவத்தை எடுத்துரைக்கும் நாள் வெகுத்தொலைவிலல்ல. அதற்கு முன் இறைவனால் நியமிக்கின்ற அவனது தூதர்கள் வந்து இறுதிவெற்றிக்காக தங்களுடைய சேவைகளை செய்வார்கள் என்பதும் உறுதியாகும்”.**

நான் இறைவனால் அனுப்பப்பட்டிருக்கும் தூதர் என்று ஹஸ்ரத் முனீர் அஹமது அஸீம்(அ) அவர்கள் நம்மிடம் கூறும் போது, அரக்க குணமற்று இரக்க மனமுடையவர்களாகி அவரை ஏற்றுக் கொள்வதே இரட்சிப்பின் வழியேயன்றி அவரை வெறுத்து ஒதுக்குவது இறைதண்டனைக்கு நம்மை ஆளாக்கிவிடும் என்பதில் சந்தேகமில்லை. இறையாண்மையை நிரூபிக்கவும் இறையாட்சியை நிலைநாட்டவும் இறை தூதர்கள் இந்த மண்ணில் வரும்போது ஆணவத்துடன் அவரை அகற்றி நிறுத்தாமல் அவரை ஏற்றுக்கொண்டு நற்செயல்கள் புரிய இறைவன் அனைவருக்கும் அருள்புரிவானாக. ஆமீன்.

**காலகட்டத்தின் கறைத் தீர்க்க வந்த இறைதூதரை குறையோடு பார்க்கும் கண்களுக்கு அவரை நிறைவோடு பார்க்கும் நிதானம் இல்லையோ?**

**மண்ணில் இறையாட்சி நடத்த நற்செய்தியாளராக வந்த ஆன்மீக மன்னனை புறக்கணிக்கும் புற்றுநோய்க்கு பூமாலையோ?**

**இறைஞானப் புதயலோடு இவ்வுலகில் தோன்றிய இறையடியானுக்கு இன்னல்களை விளைவிக்கும் இக்காலமக்களுக்கு பாராட்டுதலோ?**

**உயிர்கொடுக்க வந்த இறை நேசனை வழிமறித்து வதம் செய்யக் கொதிக்கும் நயவஞ்சகர்களுக்கு வெகுமதியோ?**

**பெரும் பாறைகள்கூட பச்சிரும்பால் பாகப்படுத்தும் போது இந்த பாவிகளின் உள்ளம் மட்டும் பகுத்தறிவில்லாத பாதாளம் போல் இருக்கின்றது. இறைவா! நன்றிகெட்ட மனிதர்களாக படைத்ததை விட இவர்களை மண்ணாய் படைத்திருக்கமாட்டாயா?**

**Proof Reader**
**Azim Ahmad**
**Sadr Sahibul Faraj**
**Kerala/ TamilNadu**
**E-mail: sahihazisulsat@gmail.com**
**Cell: 09789180817**

**Published by**
**Jamaat Ul-Sahih Al Islam**
**Dawa Department**
**Tamil Nadu. (Regd.No. A/693)**
**Web:www.jamaat-ul-sahih-al-islam.com**